Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jnrgroup.org

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்
MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் சென்னை, 19 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 130

திரிபுராவின் ஹபானியாவில் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவிகளுக்கான 200 படுக்கைகள் கொண்ட விடுதித் திட்டம்

சென்னை – 19 நவம்பர், 2026 பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவிகளின் உயர்கல்வி வாய்ப்புகளை அதிகரிக்கவும், பாதுகாப்பான தங்குமிட வசதிகளை ஏற்படுத்தவும் திரிபுரா மாநிலம் ஹபானியாவில் உள்ள மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில் 200 படுக்கைகள் கொண்ட விடுதி அமைக்கப்படவுள்ளது. மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் நிதியுதவியுடன் திரிபுரா அரசின் ஊரக வளர்ச்சித் துறை மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தொலைதூரப் பகுதிகளில் இருந்து கல்வி பயில வரும் மாணவிகள் எதிர்கொள்ளும் தங்குமிடப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வகையில் உருவாக்கப்பட்ட இத்திட்டம், மாணவிகளின் கல்வி மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்குத் துணைபுரியும். குடிநீர், மின்சாரம், முறையான சுகாதார வசதிகள், உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் அமைக்கப்படும் இந்த விடுதி, மாணவிகளிடையே தேசிய ஒருமைப்பாடு, சமூக நல்லிணக்கத்தை வளர்க்கும். வளர்ச்சியடைந்த இந்தியா 2047 தொலைநோக்குப்



பார்வைக்கு ஏற்ப, பெண்களின் முன்னேற்றம், உள்ளடக்கிய கல்வியை உறுதி செய்வதில் மத்திய அரசின் தொடர் அர்ப்பணிப்பை இத்திட்டம் எடுத்துக்காட்டுகிறது.